# *சர்வதேச நீதி வல்லுநர்களின் ஆணையம்*
# *பத்திரிகை அறிக்கை*

*ஏப்பிரல், 2007*
*ஜெனீவா.*

*உடன் வெளியீட்டுக்காக,*

## *இலங்கை: அக்ஷன் பாம் (ACF) தொண்டர் அமைப்பு பணியாளர்களின் கொலை விசாரணைகளில் குறைகள் இருப்பதாக சர்வதேச நீதி வல்லுநர் ஆணையத்தின் அவதானிப்பாளர் காண்கிறார்*

---

சர்வதேச நீதி வல்லுநர்களின் ஆணையம், இலங்கையில் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் பிரெஞ்சுத் தொண்டர் அமைப்பின் 17 பணியாளர்கள் கொல்லப்பட்ட மரண விசாரணையில் அதன் அவதானிப்பாளரின் அறிக்கையை இன்று வெளியிட்டது. பிரித்தானியாவின் சிரேஷ்ட வழக்கறிஞரான மைக்கல் பேர்ன்போம் Q.C., உள்ளூர் பொலிஸார் மற்றும் குற்றவியல் விசாரணைப் பிரிவு (சி.ஐ.டி) மேற்கொண்ட விசாரணைகளில் குறிப்பிடத்தக்களவு குறைகளைக் காண்கிறார்.

சர்வதேச நீதி வல்லுநர் ஆணையத்தின் (ச.நீ.ஆ) அறிக்கை, குற்றத்தை விசாரிப்பதற்கு பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படைகளின்றிய சுயாதீனமான ஒரு குழுவை ஸ்தாபிப்பது பற்றியும், இதன் மூலம் குற்றவாளிகளை அடையாளம் கண்டு சட்டமா அதிபரிடம் முறையிடவும், இதற்குப் பொறுப்பானவர்கள் மேல் வழக்குத் தொடரப்படுவதை அவர் உறுதிப்படுத்தல் வேண்டுமெனவும் பரிந்துரைத்தது. அத்துடன் சாட்சிகளைப் பாதுகாக்கும் ஓர் விரிவான நிகழ்ச்சித் திட்டத்தை ஸ்தாபிப்பது பற்றியும் ச.நீ.அ பரிந்துரைத்தது.

2006ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத்தின் முதல் வாரத்தில் அக்ஷன் பாம் (ACF) பணியாளர்களில் 17 பேர், இலங்கை மூதூரிலுள்ள அதன் அலுவலக வளவில் வைத்து அண்மித்த தூரத்திலிருந்து சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இக் கொலைகள், இலங்கை அரசின் பாதுகாப்புப் படைகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கிடையில் நகரின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றுவதற்காக நிகழ்ந்த சமரின் பின்னர் இடம் பெற்றது. இன்றுவரை இக் குற்றத்தின் குற்றவாளிகளை சி.ஐ.டி இனர் அடையாளம் காணவில்லை.

ச.நீ.ஆ இன் அவதானிப்பாளர் தனது அறிக்கையை நவம்பர் 2006 மற்றும் மார்ச் 2007 இல் கந்தளாயில் நடைபெற்ற மரண விசாரணைகளின் நடவடிக்கைகள்; நீதிமன்றப் பதிவேடுகளின் பகுப்பாய்வு, பொலிஸ் அறிக்கை மற்றும் தடயவியல் அறிக்கைகள் மற்றும் மரண விசாரணையை மேற்கொண்ட இரு நீதிபதிகளுடனான சந்திப்பு, சி.ஐ.டி, நீதி மற்றும் சட்டச் சீர்திருத்த அமைச்சின் செயலாளர் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பான சட்டத்தரணி ஆகியோருடனான சந்திப்பு போன்றவற்றின் அடிப்படையில் தயாரித்தார். இவ்வறிக்கை, கொலைகள் பற்றிய பொலிசாரின் விசாரணை மற்றும் மரண விசாரணை நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆராய்கிறது.

கொடூரமான ஆயுத மோதல் மற்றும் சி.ஐ.டியினரின் விசாரணைகள் தொடர்கின்ற நிலைமைகளில் இக்கொலைகள் போன்ற கடுமையான குற்றங்களை விசாரிப்பதில் உள்ளிருக்கக் கூடிய சிரமங்களை ச.நீ.ஆ ஏற்றுக் கொள்கிறது.

இருந்தபோதிலும், அவதானிப்பாளர் கீழ் குறிப்பிட்டவை உள்ளடங்கலாக இன்றுவரையிலான விசாரணைகளில் பக்கச் சார்பின்மை, வெளிப்படைத் தன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றில் பல குறைபாடுகளை இனங் காண்கிறார்.

- எந்தவொரு விசாரணைகளுக்கும் முன்பாகவே, பொலிசார் இக் கொலைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே (LTTE) பொறுப்பு எனத் தீர்மானித்ததை, பொலிஸாரின் உத்தியோக அறிக்கைகள் அவற்றின் ஆரம்பத்திலிருந்தே குறிப்பிடுகின்றன.

- சாட்சித் தடயங்கள் போதியளவிலும், பூரணமாகவும் திரட்டப்படவில்லை. குறிப்பாக, சி.ஐ.டி இனர் தங்களது விசாரணைகளின் போது கொல்லப் பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களைத் தவிர இலங்கை ஆயுதப் படைகளின் எந்தவொரு உறுப்பினரையோ அல்லது வேறு எந்தவொரு தமிழரையுமோ விசாரிக்கவில்லை.

- தடயவியலின் பகுப்பாய்வு அறிக்கையில், அதன் கண்டுபிடிப்பு, தடயப் பொருட்களின் விபரங்கள் மற்றும் அவற்றின் பரிமாற்றம் தொடர்பாக பதில் கூறப்படாத பல கேள்விகள் உள்ளன. இது தொடர்பான ஆவணங்கள், அறிக்கைகளை விபரமாக ஆராய்ந்த அவதானிப்பாளர் பல வெளிப்படையான ஒத்திசைவற்ற தன்மைகளைக் கண்டறிந்தார். வழக்கை விசாரிக்கும் இரண்டாவது நீதிபதி விடுத்த சில உத்தரவுகளுக்கு பொலிஸார் கீழ்ப்படியாமை, குறிப்பாக தடயப் பொருட்கள் அவுஸ்திரேலிய தடயவியல் நிபுணர்களின் பிரசன்னத்தில் அவர்கள் முன்னிலையில் மட்டுமே திறக்கப்பட வேண்டுமென்ற உத்தரவு மீறப்பட்டமை போன்றவை கவனத்தையீர்க்கும் விடயங்களாக உள்ளன.

இவ்வழக்கின் மூன்று தவணை மரண விசாரணைகளை ஏற்கனவே நடாத்திக் கேட்டிருந்த மூதூர் நீதிபதி செப்டெம்பர் 4 ஆம் திகதி, நீதிச்சேவைகள் ஆணைக்குழுவினூடாக நீதி மற்றும் சட்டச் சீர்திருத்த அமைச்சின் செயலாளரினால் வழக்கை அநுராதபுர நீதிபதியிடம் கையளிக்கும்படி பணிக்கப்பட்டார். விசேடமாக வழக்கு நடவடிக்கைகளின் ஓர் முன்னேற்றமடைந்த கட்டத்தில், இவ்விதமாக ஒரு நீதிபதிக்குப் பதிலாக இன்னொரு நீதிபதியை மாற்றீடு செய்வதென்பது இலங்கைச் சட்டத்திற்கு முரணானதுடன், நீதிபதிகளை மாற்றீடு செய்தமைக்கு எந்தவொரு தர்க்கரீதியான நியாயமும் காணப்படவில்லை என அவதானிப்பாளர் காண்கிறார். இம்மாற்றீடு வழக்கு நடவடிக்கைகளில் தேவையற்றதோர் தலையீடாகவும் மற்றும் சர்வதேச நியமங்களிற்கும் ஏற்புடையதல்ல எனவும் கணிக்கப்படுகிறது.

இவ்விரு நீதிபதிகளும் மரண விசாரணையை நுண்திறன் மற்றும் நேர்மையுடன் நடாத்தியதையும், இம்முறையற்ற மாற்றீடு அவர்களது சுயாதீனத்தையும், பக்கச் சார்பின்மையையும் இழந்துவிட வைக்கவில்லை என்பதையும் அவதானிப்பாளர் காண்கிறார்.

ச.நீ.ஆ, இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் உள்ளடங்கலாக, இவ்வறிக்கையில் விபரிக்கப்பட்டது போன்று பல விடயங்களைப் பரிந்துரை செய்கின்றது:

- இக்குற்றத்தை விசாரித்து, குற்றவாளிகளை அடையாளம் காண பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படைகளின்றிய ஒரு சுயாதீனமான விசாரணைக் குழுவை ஸ்தாபித்தல்.

- சாட்சிகளின் பாதுகாப்புத் திட்டமொன்றை ஸ்தாபித்தல். இத்திட்டம் இலங்கை பொலிஸ் அல்லது இராணுவம் எந்த வகையிலும் சம்பந்தப் படாத வகையில் சாட்சிகளுக்கான பாதுகாப்பளித்தல், சாட்சிகளுக்குப் புனைபெயர்களை உபயோகித்தல், கமராவிற்கு (Camera) முன் சாட்சியமளித்தல், வீடியோ (video) இணைப்பினூடாக சாட்சியமளித்தல், சாட்சிகளை இலங்கைக்கு வெளியே மீள்குடியமர்த்தும் சாத்தியம் உட்பட, சாட்சிகளை வேறிடங்களில் மீள் குடியமர்த்தல் போன்ற ஏற்பாடுகளையும் கொண்டிருக்கும்;

- வழக்குகளைத் தொடர்வதில் வினைத்திறனுடனான விசாரணைகள் மற்றும் சுயாதீனமான தீர்மானங்களை உறுதி செய்து உதவியளிக்கத் தக்க வகையில் குற்றவியல் நீதித்துறையில் சீர்திருத்தங்களை மேற் கொள்வதைத் தீவிரமாக கவனத்தில் கொள்ளுதல்.

அக்ஷன் பாம் (ACF) பணியாளர்களின் கொலைகள் உட்பட, 15 மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கண்டறிய நவம்பர், 2006இல் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவிற்கும், சாட்சிகளை அழைத்து விசாரிப்பது தொடர்பான பல பரிந்துரைகளையும் இவ்வறிக்கை வழங்குகின்றது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முடிவுகள் எப்படியிருப்பினும், இக்கொலைகளுக்குப் பொறுப்பானவர்களை ஒழுங்கான குற்றவியல் நீதி முறைகள் மூலம் இனம் கண்டு அவர்கள் மீது வழக்கு தொடரப்படுவதை உறுதி செய்ய வேண்டுமென இலங்கை அரசாங்கத்தை ச.நீ.ஆ வலியுறுத்துகிறது.

இதில் பாதிப்படைந்தவர்களின் குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களுக்கும் ச.நீ.ஆ தன் அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளவும்: ***Susan Appleyard, +41764382653.***